2017 ஜூலை 7]

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை ஒருங்கிணைந்த வளாகமாக உருவாக்கித் தந்திருக்கிறது. ஆகவே, திட்டங்களுக்காக நிறைய இடங்களைப் பார்வையிடலாம்; அதில் தவறொன்றும் கிடையாது. ஆனால், அது தகுந்த இடமா என்று ஆய்வு செய்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகுதான், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தச் செய்தியை கவனத்திலே கொண்டு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதம் இருக்கின்ற கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) பெண்ணாகரம் தொகுதியில் இரசாயனம் கலந்த மது அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. பி.என்.பி. இன்பசேகரன், என்ன சொல்லுங்கள்.*

*** திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏரியூர் அருகேயுள்ள ஏர்கோல்பட்டி, தின்னபெள்ளூர் மற்றும் ஏரியூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 4 பேர், பச்சையப்பன், வயது 25, விஜய், வயது 23, உத்திரகுமார், வயது 20 மற்றும் பழனிச்சாமி, வயது 24 ஆகியோர் கடந்த 28–6–2017 அன்று இரவு மது அருந்தியுள்ளார்கள். மறுநாள், 29–6–2017 அன்று திரு. பச்சையப்பன் அவர்களுக்கு இரத்த வாந்தி, வயிற்று வலி மற்றும் பேதி ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார். மீதமுள்ள 3 பேர்களும் தருமபுரி மாவட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி, 30–6–2017 அன்று இறந்துவிட்டார்கள். நான் உடனே சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்று, ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.*

[திரு. பி.என்.பி. இன்பசேகரன்] [*2017 ஜூலை 7*

விசாரித்தவகையில், மேற்படி நபர்கள் அருந்திய மதுவில் ஏதோ இரசாயனக் கலவைக் கலந்திருந்ததாகவும், அது சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிந்தேன். மதுவால் இறந்த நால்வரும் வயது 20 முதல் 25 வயது வரை உள்ள வாலிபர்கள். தங்களது குடும்பத்தை அவர்கள்தான் கூலி வேலைக்குச் சென்று காப்பாற்றி வந்துள்ளார்கள். தற்போது அந்த 4 குடும்பத்தினரும் வறுமையில் வாழ்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தங்களது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10.00 இலட்சம் வழங்க வேண்டும் எனக் கோருகிறேன். மேலும், மேற்படிப் பகுதியில், இரசாயனம் கலந்து மது விற்பனை செய்கின்றவர்களை அடையாளம் கண்டு அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்திடக் கோரி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது முதலில் தவறானது. அவர்கள் அருந்திய மதுவில் இரசாயனம் கலக்கவே இல்லை. திரு. பச்சையப்பன் என்பவர், மேட்டூர், மேச்சேரியில் இருக்கின்ற* JSW*–என்ற இரும்பு ஆலையில்* chemist *ஆக பணி செய்துகொண்டிருந்தவர். அங்கு* lab*–ல் இருந்த ஏதோ ஒரு திரவத்தை எடுத்துவந்து, அவர் அதைக் கலந்து குடித்தபோது, அவ்வாறு ஏற்பட்டிருக்கிறது. உண்மையாக அவர் மது அருந்தவே இல்லை. திரு. பச்சையப்பன் என்ற அந்த நபர் 28 ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் தண்ணீர் கலந்த* sprite*–டோடு கலந்து அதைக் குடித்திருக்கின்றார். 29 ஆம் தேதி மாலை 5.00 மணியளவில்தான் முதலில் அவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் பின்னர் பெண்ணாகரம் மருத்துவமனைக்குச் சென்று, பின்னர் தருமபுரியிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று, மறுநாள் காலையில் இறந்திருக்கிறார். ஆனால், அந்த விவரத்தை வருவாய்த் துறைக்கோ அல்லது காவல் நிலையத்திற்கோ தெரிவிக்காமல், அந்தப் பிரேதத்தை எரித்திருக்கின்றார்கள். அதற்குப்பிறகு, மீதமுள்ள மூவரும் ஊர் ஊராக ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சென்றதற்குப்பின்னர், இறந்துவிடுகிறார்கள். சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது,* cup*–ம்,* sprite *பாட்டில் மட்டும்தான் இருந்தன. அதேபோல் தண்ணீர் பாட்டில் மட்டும்தான் இருந்தது. ஆனால், மது அருந்தியதற்கான அறிகுறியே தெரியவில்லை. அதேபோல்*

2017 ஜூலை 7] [*திரு. பி. தங்கமணி*]

postmortem report–*லும் மது அருந்தியதற்கான அறிகுறியே தெரியவில்லை. இருந்தாலும்கூட, இன்னமும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. முழுமையான விசாரணை* test–*க்கு வந்திருக்கின்றது. அறிக்கை வந்ததற்குப் பின்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த நால்வருக்கும் உண்டான நிவாரணத் தொகை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும் அவர்கள் வாழ்வாதாரமான விசைப் படகுகள் இலங்கைக் கடல் அலையிலிருந்து சீரழிக்கப்படுவதையும் இந்த மன்றத்தில் நாம் பேசி வருகிறோம். இலங்கை நாடாளுமன்றத்தில், நேற்றையதினம், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். அதில், எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களைக் கைது செய்கின்றபோது அவர்களது படகுகளுக்கு, 50,000 ரூபாய் அபராதம் விதிக்க வேண்டும் எனவும், இரண்டு ஆண்டுகளுக்குமேல் சிறை தண்டனை வழங்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 134 படகுகள்; அதற்குப்பிறகு 143 படகுகள்; இன்றைக்கு 160 படகுகளுக்கும் மேலாக அங்கே படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றன. 60–க்கும் மேலான மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.*

முற்பகல் 11–50

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டணத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் நேற்றைக்கு முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, இலங்கைக் கடற்படையினரால் அவர்களுடைய படகு மூழ்கடிக்கப்பட்டு, அதிலே ஒரு மீனவர்